பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 10 2023 7 15

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நக்ஸலைட் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு வெற்றிபெற்றிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே வர்த்தக வாய்ப்புகள் அதிகரித்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
3. இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களை திரும்ப ஒப்படைப்பதற்கான காலக்கெடு நாளையுடன் முடிவடைய உள்ள நிலையில், இன்னமும் 12 ஆயிரம் கோடி ரூபாய் புழக்கத்தில் உள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
4. அமைதிக்கான நோபல் பரிசு, ஈரான் மனித உரிமைகள் ஆர்வலர் Narges Mohammadi -க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
5. உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நெதர்லாந்து வெற்றிபெற 287 ரன் என்ற இலக்கை பாகிஸ்தான் நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

நக்ஸலைட் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு வெற்றிபெற்றிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

நக்ஸலைட் பிரச்சினை தொடர்பாக புதுதில்லியில் மத்திய அமைச்சர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் நக்ஸலைட் தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு, நக்ஸலைட் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றியடைந்திருப்பதாக அமைச்சர் கூறினார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் நக்ஸலைட் தீவிரவாதிகளை முற்றிலுமாக ஒழிக்க அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு அஸ்வினி சௌபே, திரு நித்தியானந்த ராய், திரு அர்ஜுன் முண்டா, திரு தேவசிஸ் சௌஹான் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

இந்தியாவுக்கும் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான நட்புணர்வு வலுவடைந்திருப்பதால் இரு நாடுகளின் வர்த்தகர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் இரு நாடுகளின் வர்த்தகத்துறையினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், உணவு பாதுகாப்பு, கல்வி, எரிசக்தி, பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் தொடர்பான துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முடிவு செய்திருப்பதாகக் கூறினார்.

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்-யின் பரஸ்பர கலாச்சார மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வர்த்தக வாய்ப்புகள் பெருகி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திகழ்கிறது என்றும், வர்த்தக பங்களிப்பில் மூன்றாவது இடத்தை பிடித்திருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

புழக்கத்தில் உள்ள இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களை வங்கிகளில் திரும்ப ஒப்படைப்பதற்கான காலக்கெடு நாளையுடன் முடிவடைய நிலையில், இன்னமும் 12 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்படவில்லை என ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுவரை மூன்று லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் வங்கிகளில் செலுத்தப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இந்த தொகையில் 87 சதவீதம் வங்கிகளில் டெபாஸிட் செய்யப்பட்டதாகவும், எஞ்சிய தொகை நோட்டுகளாக மாற்றிக் கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காலக்கெடு முடிவடைந்த பின்னர் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களை ரிசர்வ் வங்கி கிளைகளில் மட்டுமே மாற்றிக் கொள்ள முடியும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையே ரிசர்வ் வங்கி வங்கிகளுக்கு வழங்கும் ரெப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று திரு சக்தி காந்ததாஸ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலை சுமூகமாக நடத்துவது குறித்து தேர்தல் பார்வையாளர்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்திஷ்கர், தெலங்கானா, மிஸோராம் ஆகிய மாநிலங்களில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் அம்மாநிலங்களில் தேர்தல் செலவினம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையின்போது தேர்தல் ஆணையர்கள் திரு அனுப் சந்திரபாண்டே, திரு அருண் கோயல் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

[]<<<>>>[]

ஜி-20 நாடாளுமன்ற தலைவர்கள் மாநாடு வரும் 13-ஆம் தேதி புதுதில்லியில் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஜி-20 நாடுகளின் நாடாளுமன்ற அவைத்தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

உலகளாவிய ஆட்சி முறை பரிமாணத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரே பூமி – ஒரே குடும்பகம் - ஒரே எதிர்காலம் என்ற மையக்கருத்துடன் இந்த மாநாடு நடைபெற உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

50-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று அவர் கூறினார்.

இந்தியாவில் இத்தகைய மாநாடு முதல் முறையாக நடைபெறுவதாகவும் திரு ஓம் பிர்லா குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

மும்பையின் கோரேகான் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

காயமடைந்த 51 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

[]<<<>>>[]

அமைதிக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு ஈரான் மனித உரிமைகள் ஆர்வலர் Narges Mohammadi -க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிரின் உரிமைக்காக போராடி வரும் அவர், தற்போது ஈரான் சிறையில் உள்ளார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெறும் 19-வது பெண் Narges Mohammadi என்பது குறிப்பிடத்தக்கது.

தமது வாழ்நாளில் 13 முறை கைது செய்யப்பட்டு, ஐந்து முறை தண்டனை பெற்றுள்ளார்.

அனைவருக்கும் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுத்து போராடி வருவதற்காக அவருக்கு அமைதிக்கான விருதை வழங்க நோபல் தெரிவுக்குழு முடிவு செய்தது.

[]<<<>>>[]

மகளிர் கல்விக்கு தமிழக அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் வீரபாண்டியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தமிழகத்தில் ஆண்களைவிட, பெண்கள்தான் அதிகமாக கல்வி கற்பதாகக் கூறினார்.

பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க பாடுபடுவோம் என்பதை முன்நிறுத்தி மக்களைவத் தேர்தலை எதிர்கொள்ளப்போவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக புதிய திட்டங்களை வழங்க வேண்டும், அதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும், சிறுபான்மையின மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் போன்றவற்றிற்காக அஇஅதிமுக பாடுபடும் என்றார்.

தமிழக அரசின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

[]<<<>>>[]

கொச்சி அருகே நேற்று இரவு மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன நான்கு மீனவர்களை தேடும் பணியில் கடலோர காவல்படை ஈடுபட்டுள்ளது.

கொச்சிக்கு அருகே 11 கடல் மைல் தொலைவில் ஏழு மீனவர்கள் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்ததில் மூன்று பேரை இதர மீனவர்கள் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்தனர்.

மேலும் நான்கு மீனவர்களை தேடும் பணியில் கேரள மீன்வளத்துறை அதிகாரிகளுடன், கடலோரக் காவல்படையும் ஈடுபட்டிருப்பதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

உக்ரைன் மீது போர் தொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ரஷ்யாவுக்கு இருந்ததில்லை என்று அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

சோச்சி நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலக அளவில் மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட ரஷ்யா, உக்ரைன் பகுதியை ஆக்கிரமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

உலகளாவிய நெருக்கடி சூழலில் உக்ரைன் மீது ராணுவ தாக்குதல் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், திரு புட்டின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் நெதர்லாந்து வெற்றிபெற 287 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாதில் தற்போது நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் 49 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 286 ரன் எடுத்தது,

தற்போது ஆடி வரும் நெதர்லாந்து சற்று முன் வரை -17- ஓவரில் -2- விக்கெட் இழப்புக்கு -77- ரன் எடுத்துள்ளது.

[]<<<>>>[]

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஆறு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் **Hangzhou** -வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஹாக்கியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

இறுதியாட்டத்தில் இந்தியா - ஜப்பானை 5-1 என்ற கோல் கணக்கில் வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இதன்மூலம், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவும் இந்திய ஹாக்கி அணி தகுதி பெற்றுள்ளது.

வில்வித்தை போட்டியின் ஆடவர் குழு பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், மகளிர் குழு பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் இந்தியா வென்றது.

ஆடவர் **Bridge** போட்டியிலும் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

மல்யுத்த போட்டியின், மகளிர் 62 கிலோ எடைப்பிரிவில் சோனமும், 76 கிலோ எடைப்பிரிவில் **Kiran Bishnoi**-யும், ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Aman Sahrawat** –யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரணாய், வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் **Sepaktakraw** போட்டியில் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

கபடி ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் நேபாளத்தையும் வென்று இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

***End of News***